விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | வைகாசி 15 | ரம்ழான் 7 | இதழ் 107
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 28-5-1985

## இந்திய வெளியுறவுச் செயலர் இன்று மீண்டும் வருகிறார்!

[கொழும்பு]

இந்திய வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி இன்றுஇலங்கை வருகிறார்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் உத்தேச இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகள்பற்றியும், அது தொடர்பான விடயங்கள் பற்றியும் ஆலோசனை நடத்தவுமே திரு. பண்டாரி இங்கு வருவதாகத் தெரிகின்றது.

திரு பண்டாரி இரண்டொரு தினங்களில் இலங்கை வருவாரென முன்பு கருதப்பட்ட போதிலும் இன்றே அவர் வருவாரென கடந்தஇரவு அறிவிக்கப்பட்டது.

இந்திய பிரதம மந்திரி அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னரே இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஆலோசனைகளை நடத்த விரும்புவதனாலேயே அவசரமாக இந்த ஏற்பாடு செய்யப்படுவதாகத் தெரிகின்றது.

## 27 பேருக்கு சம்பந்தமில்லை

(கொழும்பு)

நிக்கவரெட்டிய பொலிஸ் நிலையத்தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 37 பேரில் 27 பேர் அச்சம்பவத்துக்கு தொடர்பில்லாதவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இவர்கள் போதைப்பொருள்கள் கடத்தல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என பொலிஸார் கருதுகின்றனர். ஏனைய 10 பேர் பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன.

# தமிழ்ப் பகுதிகளை நேரில் பார்க்க திட்ஷித் விருப்பம்!

## இந்திய அரசின் அனுமதி கிடைத்ததும் வருவார்

(பெஞ்சமின் ராஜரட்ணம்)

இலங்கைக்கு வந்துள்ள புதிய இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே. திட்ஷித் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம்செய்து நிலைமைகளை நேரில் அறிய விருப்பம் கொண்டுள்ளார்.

நேற்று இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்து தமது நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்துத் திரும்பியபின் 'ஈழநாடு' சார்பில் அவருடன் தொடர்பு கொண்டபோது திரு திட்ஷித் இத்தகவலை தெரிவித்தார்.

இந்திய அரசின் உத்தரவுகளையும் இலங்கையில் உள்ள பாதுகாப்பு நிலைமைகளையும் அனுசரித்தே தாம் இப்பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றார் திரு. திட்ஷித்.

நேற்று ஜனாதிபதிதிரு. ஜே. ஆர். ஜயவர்தனாவையும் வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் ஆகியவர்களுடன் இருநாடுகளுக்கும் அக்கறையுள்ள பல தரப்பட்ட விடயங்கள் குறித்து ஆரம்ப பேச்சுக்களை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியைச் சந்திக்கவிருப்பதாகவும், பிரதம மந்திரி திரு பிரேமதாஸ, கிராமிய தொழிற்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமான், டாக்டர் நீலன்திருச்செல்வம் ஆகியவர்களையும் சந்திக்க விருப்பதாக அவர் கூறினார்.

பத்திரிகையாளர்களையும் தாம் சந்திக்க விருப்பதாக திரு திட்ஷித் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழர் பற்றி அறிவதில் மேற்கு ஜெர்மன் தொலைக்காட்சி குழு ஆர்வம்

### நீலனைச் சந்தித்தது

[கொழும்பு]

இலங்கைத் தமிழர்கள் நிலைமைபற்றி அறிவதில் மேற்கு ஜெர்மன் தொலைக் காட்சிப் படப்பிடிப்புக் குழு ஒன்று மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றது.

இக்குழுவினர் டாக்டர்நீலன் திருச்செல்வத்தை நேற்றுச் சந்தித்தனர்.

இலங்கைத் தமிழர்கள் வர

[6-ம் பக்கம் பார்க்க]

## காத்தான்குடிச் சம்பவம் தொடர்பாக 7 பேர் கைது!

[கொழும்பு]

காத்தான்குடியில் சில தினங்களுக்குமுன் டிராக்டர் ஒன்று எரிக்கப்பட்டது தொடர்பாகவும் வீடுகள் தீக்கிரையானது தொடர்பாகவும் சுமார் 7 பேர் பொலிசாரால்கைது செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதையடுத்தே கலவரங்கள் வலுத்ததாகவும் வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் கூறப்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க சகலஎம்.பி.க்களும் முன்வரவேண்டும்'

### அமைச்சர் தேவநாயகம் பேச்சு

(கொழும்பு)

"இன்றைய பயங்கரவாத தொல்லைகளிலிருந்துநாட்டைப் பாதுகாப்பதற்கு சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வரவேண்டும்" என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே., டபிள்யூ. தேவநாயகம்கூறியுள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் திரு. தேவநாயகம் இவ்வாறு கூறினார்.

"பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் மக்களைப் பங்குகொள்ளச் செய்வதற்கே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில அதிகாரங்களை வழங்குவது என்று ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிகளைத் தணிப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" என்றும் கூறினார்.

"பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் மக்களின் ஆதரவைப் பெறமுடியும். அதனால்தான் இவர்களுக்கு சில அதிகாரங்களை வழங்குவதென ஜனாதிபதி எடுத்த தீர்மானம் மிகவும் பொருத்தமானது" என்றும் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள் அனைவருக்குமே காசோலை மூலம் சம்பளம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் காசோலைகள் மூலமே சம்பளத்தை வழங்குவதென்று அரசு தீர்மானித்துள்ளது

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இத்திட்டம் வெற்றியளித்திருப்பதனால் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அனுராதபுரத்திலிருந்து இடம்பெயர்ந்த அரசஊழியர்கள் தமது பகுதி அலுவலகத்தில் வரவைபதிந்துகொள்ளலாம்!

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் பணிபுரிந்து தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள அரசாங்க ஊழியர்கள் தத்தமது பகுதியிலுள்ள தாம் பணிபுரியும் திணைக்களத்தின் அலுவலகத்துக்குச் சென்று தமது தினவரவைப் பதிந்து கொள்வதற்கான தற்காலிக ஏற்பாடொன்றை யாழ். அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் சங்கம் செய்து கொண்ட முறைப்பாட்டையடுத்து அரசாங்க அதிபர் அரச சேவைகள் திணைக்கள செயலாளர் திரு சிறிவர்தனாவுடன் தொடர்பு கொண்டு இந்த ஏற்பாட்டை செய்துள்ளார்.

ஜூன் 5-ம் திகதி வரையே

(6ம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் புயல்: மரணங்கள் 20 ஆயிரமாக அதிகரிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் வீசிய பெரும் புயலினால் இதுவரை இறந்துள்ளவர்களின் எண்ணிக்கை இருபதாயிரமாக உயர்ந்துள்ளது

இத்துயர சம்பவத்தின் சரியான தகவல் கிடைத்ததும் இறந்தவர்களின் தொகை நாற்பதாயிரமாக இருக்கலாமென்றும் அதிகாரபூர்வமானசெய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரையும் காணமற்போனவர்களின் எண்ணிக்கை முப்பதாயிரத்திலிருந்து நாற்பதாயிரம்வரை இருக்கலாமென்றும் அஞ்சப்படுகிறது.

இந்தப் பயங்கரப் புயலினால் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ள பங்களாதேஷில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு துக்க

(6ம் பக்கம் பார்க்க)

## ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சை: குழப்பப்பட்டால் மீண்டும் நடத்தப்படமாட்டாது!

### ஆகஸ்ட் 3-ல் ஆரம்பம்

[கொழும்பு]

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதியிலும் ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சைகள் வரும் ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒன்றரைலட்சம் பேர் விண்ணபித்திருப்பதாகத் தெரிகிறது.

பரீட்சை நடைபெறும்போது குழப்பம் ஏதும் நடைபெற்று பரீட்சை நிறுத்தப்படுமானால் இடையில் மீண்டும் பரீட்சையை நடத்துவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அடுத்த பரீட்சை 1986ம் ஆண்டிலேயே நடத்தப்படும்.

## கொள்ளைபோன கம்பிகள்: மீண்டும் கிடைத்தன!

(யாழ்ப்பாணம்)

பாஷையூரிலுள்ள யாழ். மாநகரசபையின் கன்கிறீட் தூண் தயாரிக்கும் பிரிவில் கொள்ளையடிக்கப்பட்ட கம்பிகள் மீண்டும் கிடைத்துள்ளன.

இனந்தெரியாத ஐவர் காவலாளியைப் பயமுறுத்தி கம்பிகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகவும், இதனையறிந்த அப்பகுதி இளைஞர்கள் அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

# அசிளம்பரம்

## விற்பனைக்கு

சியாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சியாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611.
(2820)

யூனிபோ உருக்கு அலுமாரி மேசை, T.V. Stand, ஆபிஸ் கபேட் எமது யூனிபோ காட்சியறை 57, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. நிலைக்கண்ணாடியுடனும் அலுமாரிகள் தற்பொழுது விற்பனையாகின்றன.
3416

9 சிறீ Volkswagen 1300 கார் நல்ல பாவனையிலுள்ளது விற்பனைக்குண்டு. தொடர்பு;- Dr சிங்கராசா, 39, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
3476

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

மரண சாதனமின்றி மரணித்த மானிப்பாயைச் சேர்ந்த சின்னையா பெண் நாகம்மாவின் மரணச் சொத்துச் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

-மரணித்தவர்
வேலன் சின்னையா, பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய்.

-மனுதார்

இல. தத்துவம்/3877
எதிர்

1. சின்னையா துரை சிங்கம்,
2. சின்னையா செல்வ ராசா,
3. சின்னையா மகள் துரையம்மா,
4. சின்னையா மகள் புனிதராணி,
5. சின்னையா புஷ்ப ராசா, எல்லோரும் பட்டின சபை ஒழுங்கை, மானிப்பாய்.

-எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவர் மரணசாதனமின்றி இறந்தவரின் சொத்துக்கு நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் பின்னுறுதிக் கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி முற்பகல் 9 00 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

இந்நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது
சி. வசந்தசேனன்
மனுதாரின் சட்டத்தரணி
3486

## விற்பனைக்கு

''கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில் 1 பரப்புக் காணியும் மின்சாரம் சகல வசதியும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. விலை. ரூ 1,65,000/- விபரங்களுக்கு 3 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும் வீ. ரவீந்திரன், 134. கச்சேரி நல்லூர் வீதி, முத்திரைச்சந்தை.
3480

Stop பிறேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும். ட்றேட் சென்ரர், Home Finance Ltd, 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
2862

Piano-Monington and Weston உடன் விற்பனைக்கு உண்டு. 39, கச்சேரி. நல்லூர் றோட்.
3475

Ford Prefect E N: 8961 கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- என். பார்த்திபன், 572. கலட்டி அம்மன் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
3483

## தேவை

யாழ்ப்பாணம் றோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் தேவை. நேரில் வரவும்.
3457

## சேக்கிழாருக்கு நினைவுச் சின்னம்

(சென்னை)

தமிழக அரசு சைவப்பெரியார் சேக்கிழார் பெருமானுக்குச் சென்னை மாநகரில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கவுள்ளது. (ரா)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மாதகல் வில்வளை கந்தையா இராமுப்பிள்ளையின் மரணச் சொத்துக்கள் விடயமாக.

இறந்தவர்
இராமுப்பிள்ளை கைம்பெண் சுபத்திரை, வில்வளை, மாதகல்.

மனுதார்.

இல: T. 218

1. இராமுப்பிள்ளை சிவ சுப்பிரமணியம், அராலி தெற்கு, அராலி.
2. இராமுப்பிள்ளை மகள் நளாயினி, வில்வளை. மாதகல்.

எதிர் மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984 ம் ஆண்டு மார்கழி மாதம் 12 ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றாக கட்டளையாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்.
பதிவாளர்

தயாரிப்பு:
எம்.கே. சுப்பிரமணியம்
மனுதார் தரணி

காரணம்காட்டும் திகதி. 5-6-88 க்கு நீடிக்கப்பட்டது.

சி. இரத்தினம்
பதில் பதிவாளர்
23-5-85
3474


# பிரயாண சேவை

கொழும்பு — பேர்லின்
கொழும்பு — லண்டன்

விமானப் பயணங்கள்

- துரிதசேவை (வாராந்தம் இரு சேவைகள்)
- முற்பணம் அவசியமில்லை
- யாழ் — கொழும்பு — கட்டுநாயக்கா

பிரயாண ஒழுங்குகள்,
கொழும்பில் கண்ணியமான தங்குமிடவசதி

மற்றும்

பாஸ்போட், விசா, பொண்ட்
ஆகியவற்றிற்கும்

## லிப்றுஸ் லிமிட்டெட்

(R. G பில்டிங்)
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில்
LIBRAS LTD.
PAUL VI CENTRE.
24, FRONT STREET, COLOMBO 1.



# ''பாணி விற்பனைக்கு''

தரமான புகையிலைப் பாணி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.

பளை (3478)


# காணவில்லை

பல வருடங்களின் பின் சுகவீனம் காரணமாக தாயகம் திரும்பிய இளவாலையைச் சேர்ந்த T. X தேவமனோகரன் என்ற இளைஞனை சென்ற செவ்வாயிலிருந்து காணவில்லை.

இவர் உயர்ந்த தோற்றமும், கருமை நிறக் காற்சட்டையும், மஞ்சள் 'T' சேட்டும் கடைசியாக அணிந்திருந்தார். வீட்டிலிருந்து சயிக்கிளில் புறப்பட்டபோது அடையாள அட்டையைத் தவறுதலாக உடன் கொண்டுசெல்லவில்லை. குறிப்பிட்ட சுற்றாடலில் இவர் புதியவராதலால், யாராவது சந்தேகத்தின் பேரிலோ அல்லது வேறு காரணத்திற்காகத் தடுத்து வைத்திருந்தால் அவரை விடுவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இவரைப் பற்றிய தகவல்களைப் பெறவோ, கொடுக்கவோ விருப்புபவர்கள் கீழ் விலாசத்தில் உடன் தொடர்புகொள்ளவும்

''பூம்புகார்'',
இளவாலை.


தாய் – சகோதரர்
(3484)

கொற்றுவத்தை (வல்வெட்டித்துறை)

## நடராஜா சிவபாலன்

அமரத்துவம் அடைந்த

# 31-ம் நாள் நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
30-11-1955

ஆள்பவன் அழிப்பு:
28-04-1985

ஆண்டு குரோதனத்துச் சித்திரையைச் சார்பூர் வத்தீண்டு நவமி திதி எம்மன்பு - பூண்டமதன் வல்லசிவ பாலனவன் விண்ணிடதம்த ஈசனடி புல்லப் பிரிந்த தினம்.

அன்புடனும் பாசத்துடனும் அஞ்சலி செலுத்தி ஆத்ம ஈடேற்றத்திற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்காமார், தங்கைமார்
அண்ணாமார், தம்பிமார், உறவினர்கள், நண்பர்கள்.

சட்டம்பியார் வளவு, கொற்றுவத்தை,
வல்வெட்டித்துறை.
3477

முதலாம் வருட

# நினைவஞ்சலி

செல்வன்

## சுப்பிரமணியம் ஸ்காந்தரூபன்



தோற்றம்:
23-01-1957

மறைவு:
07-06-1984

திதி: 28-05-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்து விட்ட அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை என்றும் விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், தங்கை, தம்பிமார்,
மைத்துனர், மருமகள்.

உய்யக்கட்டுஸ், அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
3459

## மணிவாக்கு

பறவைகளைப் போல் நாம் பறக்க முடிவதில்லை; சிறகில்லாததே காரணம். சிறகுண்டென்பது வாழ்வில் விசுவாசம் உண்டென்பதைக் குறிக்கிறது.

ஜே. எம். பாரி

# நமது நோக்கு

## பாடசாலை மாணவர் பாதுகாப்பு

அநுராதபுர கோரச் சம்பவத்தைக் கேட்டதும் கொழும்பில் பிரபல கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களை அச்சமடைந்த பெற்றோர் வீட்டுக்குக் கூட்டிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

செவ்வாய் 14-ம் திகதி காலையில் நடைபெற்ற தாக்குதல் பற்றி அன்றே பலருக்குத் தெரிந்தபோதும் இலங்கை வானொலி புதன் கிழமை மத்தியானம் வரை எதுவும் அறிவிக்காததால் அச்சம் கற்பனைக்கிடமளித்தது.

எனவே மாணவர் பாதுகாப்பு வடமாகாண அதிபர்கள் சங்கம் குறிப்பிடுவது போல் இந்த மாகாணத்துக்கு மட்டும் உரிய விடயமல்ல.

வடபகுதியில் மாணவர், பெற்றோர், பொதுமக்கள் அனைவரும் நீண்டகாலமாக போதிய பாதுகாப்பற்று வாழ்ந்து வருகின்றனர்; அதே காரணமாகப் பலர் அகாலமரணமடைந்திருக்கின்றனர். சரியான புள்ளி விபரங்கள் சேகரிக்கும் பணியில் ஆசிரியர் சமூகம் ஆதாரமுள்ள தகவல்கள் திரட்டவேண்டும்.

நாடு முழுவதிலும் ஒரு குழப்ப நிலை காணப்பட்டபோதும், வடபகுதியில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பெரிய பாடசாலைகள் இருப்பதால் விடயம் முக்கியத்துவமானது; அவசர அவதானத்துக்குரிய விடயங்களில் இது முதன்மையானது.

தினசரி அசம்பாவிதங்கள் நிகழுங்காலத்தில் பாடசாலைகளில் மட்டுமல்ல, வீட்டில் பாதுகாப்பாக இருப்பதும் சந்தேகமானது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூடிய வடமாகாண பாடசாலை அதிபர்கள் இன்றைய நிலைமையை நன்றாக உணர்ந்திருக்கின்றனர். இது அவர்கள் பாடசாலைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன வென்பதை விளக்கியமுறையில் வெளிப்படுகிறது.

பாதுகாப்பின்மை என்ற அச்சம் பாடசாலை சூழலை பீடித்திருப்பதே சங்கம் குறிப்பிட்டிருக்கும் காரணங்களில் மிகப் பயங்கரமானது. இந்த நிலையில் வாழும் மாணவர் செவ்வனே போஷிக்கப்படவேண்டியவர்கள்.

பாடசாலைகளுக்கு மாணவர் வரவு குறைவது மட்டுமல்ல, பாடசாலையை, ஊரைவிட்டு வெளியேறும் நிகழ்ச்சி பாடசாலை வீழ்ச்சிக்கு வழிகோலுகிறது. இது ஒரு தற்காலிகமான நடவடிக்கை என்று கொள்ளவும் முடியாது.

இலங்கையிலிருந்து இந்தியாவில் தஞ்சம்புகும் அகதிகளுக்கு இந்தியஅரசு தனிப்பட்ட கட்டிட வசதிகள் அமைப்பதானல் பிரச்னை இன்று நாளை அல்லது இரண்டொரு வருடத்தில் முடியுமென்ற நம்பிக்கை ஒளிஉடையதல்ல.

எனவே வசதியுடையவர்களும், எவ்வகையிலும் கல்வியைக் குழப்பமின்றித் தொடரவேண்டுமென்ற உறுதிகொண்டவரும் இந்தியா அல்லது பிரிட்டன் போன்ற இடங்களுக்குச் செல்வது இயற்கை.

எல்லோருக்கும்சமசந்தர்ப்பம் என்று நாம் கோஷம் போட்டாலும், அதில் ஓரளவுக்கு வெற்றி கண்டபோதும், விவேகமுடைய மாணவர் கூட்டம் பாடசாலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அதன் வெளியேற்றம் இன்றைய நிலையின் மோசமான அம்சம்.

மத்திமமாணவர் உத்தம மாணவரின் நிழலில் வேகமாக முன்னேறுதல் கண்கூடு. இந்தவகையில் இன்று காணப்படும் மாணவர் வெளியேற்றம் தடுத்து நிறுத்தப்படவேண்டியது.

பீதியடையும் சமூகத்துக்கு பிற்காலம் சூனியமாகும்; எதற்கும் அஞ்சாது சண்டையோ, சமாதானமோ எதற்குமுரிய வகையில் எம்மைப் பாதுகாத்து தொட்ட தொழிலில் தொடர்வதே நாம் வாழும் வழி. ஆசிரிய-மாணவ சமுதாயம் அமைதிக்கு வழி காண உழைப்பது மிகஅவசியம்.

இந்த உண்மையில் உறுதி கொண்டவர்கள்-குறிப்பாக ஆசிரியர்கள், அதிபர்கள் தத்தம் பாடசாலைக்கு மட்டுமல்ல அதன் சுற்றுடலின் பாதுகாப்புக்கு திட்டம் வகுத்து அச்சூழலின் சமூகப் பிரமுகருடன் ஒத்துழைத்து, எந்தஆபத்துக்கும் தலைமை தாங்கத் தயாராகவேண்டும். மாணவரின் கட்டுப்பாடு இதில் பெருவெற்றியீட்டவல்லது.

எனவே பாடசாலையில் பாதுகாப்பின்மை, போக்குவரத்தில் பாதுகாப்பின்மை, போக்குவரத்துச் சீர்கேடு, அச்சம் பரவிய சூழ்நிலை என்று பட்டியல் போட்டு ஒரு நீண்ட மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்புவது தவிர்க்கமுடியாததானாலும் அதுபோனவழியில் போகும் செயல் என்பதை உணரவேண்டும்; பயனற்ற பிரயத்தனம்.

எதற்கும் ஜனாதிபதி உதவவேண்டுமானால் அது பெரும்பாலும் எங்கள் கையில் உண்டான வழி வகைகளைப் பொறுத்ததே

மாணவ சமுதாயம் ஆசிரியர் தலைமையில் விவேகமான, பீதியற்ற பாங்கில் எதிர்பார்த்த, எதிர்பாராத கொலைகள் அனைத்தையும் சமாளிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். சுதந்திர வாழ்வுக்குக் கண்டிப்பான கட்டுப்பாடு அவசியமென்பதை இக்காலத்தில் நன்கு உணரலாம்.

நிலைமையை பெருமளவிற்கு கட்டுப்படுத்தவும், அதனைச் சீராக்கவும் பாடசாலை அதிபரின் ஆற்றலும், அனுபவமும் மிக முக்கியமானதை நாம் வற்புறுத்துகின்றோம் சங்கரீதியில் செயற்படுவது இக்காலத்தில் துரிதப்படுத்தவேண்டியது. ஆனல் ஒவ்வொரு பாடசாலையும் தனித்துவமுடையதாக இயங்கவேண்டும்.

இங்கிலாந்தில் யுத்த காலத்தில் குண்டுகள் பாடசாலைகளில் வீழ்ந்தபோதிலும் பாடசாலைகளும் கல்வியும் அதற்கேற்ற முறையில் எவ்வித சீர்கேடுமின்றி தொடர்ந்ததை நாம் கவனத்தில்கொண்டால், இன்றைய நிலைமையை சமாளிப்பதுமட்டுமல்ல; அமைதி உருவாக உழைக்கும் வல்லமையுடையவர்களாவோம்.

---

### கொடூரமான மனிதப்படுகொலை:

# விசாரணை நடத்தி நஷ்டஈடு வழங்குக!

## மனித உரிமை வெகுஜன இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, நெடுந்தீவு சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தி, பாரபட்சமின்றி நஷ்டஈடு வழங்குமாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை மனிதஉரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் கோரியுள்ளது.

மேற்படி இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. எஸ். தேவராஜா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"கடந்த இருவாரங்களுக்கு முன்னர் வடபகுதியின் வல்வெட்டித்துறை பொலிகண்டியிலும் நெடுந்தீவு குறிகாட்டுவான் கடலிலும் இடம்பெற்ற கொடூரமான மனிதப்படு கொலைகளைப்பற்றி ஆழ்ந்த கவலையுடன் தங்கள் கவனத்திற்கு எமது மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் கொண்டு வருகின்றது.

'ஆயுதப்படையினரால் வல்வெட்டித்துறை -பொலிகண்டியில் ஒரு நூல் நிலையக் கட்டிடத்தினுள் ஒன்ருக வைத்து 24 பேர் கொல்லப்பட்டிருக்கிருர்கள். அதே நூல் நிலையத்திற்கு அண்மையில் வைத்து 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிருர்கள்! வல்வெட்டித்துறையின் ஏனைய பகுதிகளில் 34 பேர் கொல்லப்பட்டிருக்கிருர்கள். நெடுந்தீவு குறிகாட்டுவான் கடல்ல் படகில் பிரயாணம் செய்தவர்களில் கைக்குழந்தை, நாலு வயதுக்குழந்தை, பெண்கள், வயோதிபர்கள் உட்பட மொத்தம் 35 பேர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருக்கிருர்கள். நாம் அறிந்த வரையில் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் ஒன்று மறியாத அப்பாவிப் பொது மக்களே ஆகும். மேற்படி சம்பவங்கள் அநாகரிகத்தின் உச்சத்திற்குச் சென்ற நடைமுறைகளையே எடுத்துக் காட்டுகின்றன மேலும் தேடுதல் நடவடிக்கையின்போது யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டில் இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டிருக்கிருர். மனிதாபிமான மற்ற மேற்படி சம்பவங்களால் தமிழ் மக்கள் அனைவருமே அதிர்ச்சியும், பீதியும் அடைந்திருக்கிருர்கள்.

"இத்தகைய இழிவானதும் துயரம் மிகுந்ததுமான சம்பவங்களை மனித இதயம் படைத்த எவரும் கண்டிக்காமல் இருக்க முடியாது. இதே அடிப்படையில் அனுராதபுரத்தில் 146 சிங்கள அப்பாவி மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள உயிர்க்கொலைகளை எவ்வித தயக்கமும் இன்றி நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

எனவே அடிப்படை மனித உரிமைகளை மீறிய மேற்படி படுகொலைச் சம்பவங்களைப் பற்றிப் பூரண விசாரணை நடைபெறவும் இவற்ருல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பாகுபாடு இன்றி நஷ்ட ஈடு வழங்கவும் இதுபோன்ற படுகொலைகளும், கற்பழிப்புகளும் இனிமேலும் நடைபெருது இருக்கத் தாங்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என எமது மனித உரிமைகளுக்கான வெகுஜனஇயக்கம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறது.'

---

# அறிவு வளர்ச்சி நிதியத்திற்கு கை கொடுங்கள்

**கலாநிதி ஆர். டபிள்யூ. வி. தம்பையா**
**I. R. C. P. and S (EDIN) D. P. H.(LOND.)**

ஒரு பிள்ளையினது எண்பது வீதமான அறிவு வளர்ச்சி அக்குழந்தை, தாயின் கருப்பையிலிருக்கும்போதே வளரத் தொடங்கி, அதன் இரண்டு வயது பூர்த்தியடையும்வரையும் வளர்கின்றது. அதன் அறிவு வளர்வதற்கேற்ற தேவையான போஷாக்குள்ள உணவு அக்குறுகிய காலத்துள் கொடுபடாவிடில் அதனல் ஏற்படும் தீங்கு மிகப்பெரிதாகும். அதாவது வாழ்நாள்முழுவதும் அக்குழந்தை அறிவு குறைந்த குழந்தையாகவே இருக்க நேரிடும்.

மூன்ருவது உலக நாடுகளில் உணவுப் போஷாக்கின்மை மிகத் தீவிரமாகப் பரவியுள்ளது மிக வசதிகுறைந்த தாய்மார்கள் கருவுற்றிருக்கும் போது போஷாக்குள்ள உணவை உண்ண முடியாமல் இருக்கின்ருர்கள். ஆகவே அந்த இளம் தய்மார்களுக்குச் சிறந்த போஷாக்குணவைக் கொடுக்கும் பொறுப்பை மூன்ருவது உலகநாடுகளில் அரசங்கமே பொறுப்பேற்றுச் செய்ய முடியும்.

ஆனல் இங்கு இப்பொறுப்பை ஒரு தாய்சேய் உடல் நலச்சங்கம் ஒன்று ஏற்றுள்ளது. இந்தச் சேவை மகப்பேறு காலத்துக்கு முற்பட்ட சேவையாகும்.

கர்ப்பமடைந்த மூன்ரும் மாதத்திலிருந்தே போஷாக்குக் குறைந்த தாய்மார்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களில் இடம்பெற்றுள்ள மருத்துவக் குறைபாடுகளைச் சீர் செய்வதுடன் தேவையான சத்துணவு யாது என்பதனையும் குறித்துக் கொடுப்பார்கள். குறித்துக் கொடுக்கப்பட்ட உணவு இந்த நிலையத்தில் தாய்மார்களுக்கு நாள் தோறும் வழங்கப்பட ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. இந்த நடைமுறை குழந்தை பிறந்தவுடன் மட்டும்நில்லாது தாய் பாலூட்டும் காலம்வரையும் தாய்க்குச் சத்துணவு வழங்கப்படும் பின்பு பாலூட்டுவது நின்றவுடன் குழந்தைக்கு உணவு வழங்கும் திட்டம் அதன் இரண்டாவது வயது பூர்த்தியகும்வரையும் நடைபெறும். அத்துடன் இத்திட்டம் நிறைவேறும்.

எந்தவொரு உடல் நல சேவைத்துறைப் பணிக்கும் மற்றும் நாட்டுப்பணிகளைப் போன்று பணம் அவசியம், பணம் மாத்திரம் முக்கியமானதல்ல. இத்திட்டத்திற்கு ஆண், பெண் இருபாலரது அர்ப்பணிப்பும் அவசியம். தன் நம்பிக்கையும் செயற்பாடுமே பணம் இல்லாவிடினும் பெருவெற்றியைத் தரும்.

இதற்காக ஒரு சிறிய நம்பிக்கைநிதி என்பெற்ருேர்களின் ஞாபகார்த்தமாக 'பாக்கியம் குரூசெற் நம்பிக்கை நிதியம்' என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ளது. இந் நிதி தொடர்ந்து தாய் சேய் நலச் சங்கத்திற்குப் பொறுப்பாக உள்ள மருத்துவ சுகாதார சேவை அதிகாரி மாதாந்தம் தமக்குத் தேவையானவற்றையும், போஷாக்குக் குறைபாடுடைய தெரிந்தெடுக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அவசியமானவற்றையும் வழங்குவதற்கும் பயன்படும்.

தற்போது 87 வயதாக இருக்கும் எனது ஆசை என்னவெனில்—

நான் இறக்கும் பட்சத்தில் எனது இறுதிச் சடங்குகள் அடக்கமாக அமைய வேண்டும்; அதன் மூலம் மீதப்படுத்தப்படும் பணம் இந்நிதியத்திடம் கையளிக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

எதிர் காலத்தில் ஆண்டு விழாக்கள் போன்ற தருணங்களில் என்னை நினைவு கூரும் நண்பர்கள் என் நினைவைச் சிறப்பிப்பதற்கான ஒரேவழி இந்நிதியத்திற்குத் தம்மாலான பொருளுதவியை வழங்குவதேயாகும்; எல்லாக்கொடுப்பனவுகளும் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்:

'பாக்கியம் குரூசெற் நம்பிக்கை நிதி' மே/ பா. மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம்.

---

## றமழான் சிந்தனை

நீங்கள் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்; நாம் உங்களுக்கும் அவர்களுக்கும் ஆகாரமளிப்போம்; அவர்களைக் கொலை செய்வது, நிச்சமாக பெரும் பாபமாகும். நீங்கள் விபசாரத்தை அணுகவும் வேண்டாம்; நிச்சமாக அது மானக்கேடானதாகவும், தீயவழியாகவும் இருக்கிறது.

—திருகுர் ஆன்-17:31-32.

நோன்பு துறக்கும் நேரம். (மஃரிப்) 6-22.

நோன்பு ஆரம்பமாகும் காலம் (ஸஹர் முடிவு) 4-18

ஜனுப் எம். ஏ.சி. ஹசன்.

## இலங்கைத் தமிழ் அகதிகளின்
# நிவாரணப் பணிகள் திருப்தி
# 63 முகாம்களில் 22,000 பேர்!

[சென்னை]

தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கான நிவாரணப்பணிகள் திருப்திகரமான முறையில் நடைபெற்றுவருவதாக தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு பி இராமசாமி சென்னையில் நிருபர்கள் மத்தியில் தெரிவித்தார்,

சாம்பூர் பகுதிகளில் அமைந்துள்ள முகாம்களுக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் இராமசாமி, அங்கு அகதிகள் மத்தியில் பேசியபோது முகாம்களில் உள்ள குழந்தைகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி பள்ளிக்கூடங்களில சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், அவர்களுக்கான இலவச சீருடைகளும் புத்தகங்களும் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 63 முகாம்களில் தங்கியிருக்கும் 22 ஆயிரம் அகதிகளுக்கும் இதுவரை 77 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதென்றும் தற்பொழுது இராமேஸ்வரம் வரும் இலங்கை தமிழ்அகதிகளின் எண்ணிக்கைநாளொன்றுக்கு பத்துப்பேர் வீதம் குறைந்துள்ளதென்றும் அமைச்சர் இராமசாமி தெரிவித்தார். (ரா)

## குவைத் மன்னர் மீது நடந்த குண்டுவீச்சு

(குவைத்)

குவைத் மன்னர், நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிறுகாயங்களுடன் மயிரிழையில் உயிர்தப்பினார்.

அமைச்சரவைக் கூட்டமொன்றுக்குச் சென்றுகொண்டிருந்தபோது மன்னர் சென்ற வாகனத்துக்குப் பின்னால் வந்த வாகனமொன்றுக்கு குண்டு வீசப்பட்டது. இச்சம்பவத்தில் மன்னரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் பலியானார். மேலும் ஐந்துபேர் படுகாயமடைந்தனர். மன்னருக்கு கண்ணாடித் துண்டுகள் சிதறியதினால் சிறுகாயம் ஏற்பட்டது.

லெபனானில் அமைந்திருக்கும் ''இஸ்லாமிய ஜகாத் இயக்கம்'' குண்டுவெடிப்புக்கு உரிமை கோரியுள்ளது.

## மினி பஸ்கள் மட்டுமே ஓடுகின்றன

(யாழ்ப்பாணம்)

டீசல் இல்லாததினால்நேற்று பாடசாலை பஸ் சேவைகளும் நடைபெறவில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

சில இடங்களில் மாணவர்கள் நீண்டநேரம் காத்து நின்றுவிட்டு பாடசாலை செல்லாமலே வீடு திரும்பினர்.

யாழ். மாவட்டத்தில்நேற்று வ. பி.போ.ச. பஸ்சேவைமுற்றாக ஸ்தம்பித்தது. மினிபஸ் சேவைகள் மட்டுமே நடைபெற்றது. டீசல் வந்தபின்னரே வ.பி போ.ச. பஸ்சேவை நடைபெறும் எனக் கூறப்படுகிறது. (க)

## கிளிநொச்சி கச்சேரியில் கொள்ளை!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கச்சேரியில் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக புகார் செய்யப் பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளை கச்சேரிக்காவலாளியைப் பணயம்வைத்து மேற்படி கொள்ளையை வாகனம் ஒன்றில் வந்தவர்கள் நடத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

## முத்துமாரி அம்மன் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 8ம் திகதி சனிக்கிழமையுடன் நிறைவு பெறும்.

ஒன்பதாம் திருவிழாவன்று அம்பாளுக்கு விசேட பொங்கலும் அதைத்தொடர்ந்து உற்சவமும் நடைபெறும்.

## இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை இடமாற்றம் செய்யப்படுவதற்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து அதனை ரத்துச் செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி திரு. கதிரவேற்பிள்ளையின் கண்காணிப்பில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மிகவும் சிறப்பாக இயங்கிவந்ததாகவும், வைத்தியசேவைகள் திறம்படமேற்கொள்ளப்பட்டதாகவும், வைத்தியசாலையின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்து அவர் இடமாற்றம் செய்யப்பட்டால் வைத்தியசாலை மிகவும் பாதிப்படைய நேரிடுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக் கமிட்டியும், மற்றும் பல பொதுநல ஸ்தாபனங்களும் இந்த இடமாற்றத்தை ரத்துசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

## ஆதீனத்தில் கந்தபுராணம்

(வண்ணார்பண்ணை)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் பகல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தலைமையில் நடைபெற்றுவருகிறது.

## கொலைகள், கொள்ளைகளை கண்டித்து வல்வை மக்கள் உண்ணாவிரதம்

[கரவெட்டி]

படுகொலைகள், கொள்ளைகள் என்பவற்றைக் கண்டிக்குமுகமாக அண்மையில் வல்வெட்டிப்பகுதி மக்களால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

வல்வை முன்னாள் நகரபிதா திரு. எஸ். ஞானமூர்த்தி இதனை ஆரம்பித்து உரையாற்றினார்.

இப்பகுதிகளில் அண்மையில் அகால மரணமானவர்களுக்கு 2 நிமிட நேர அஞ்சலி செலுத்தப்பட்டவேளை பலர் கண்ணீர்விட்டுக் கதறிபழுத காட்சி நெஞ்சை நெகிழவைத்தது, மௌன ஊர்வலம் ஒன்றும் இடம்பெற்றது.

## ஓய்வூதியம் பெறும் தோட்டப்பாடசாலை ஆசிரியர்

(கொழும்பு)

தோட்டப பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் ஓய்வூதியம்பெற இரண்டுவார காலத்திற்குள் சேவைக்கால விப்ரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. க. சிவஞானம் கல்விப்பிரிவு ஆலோசகர் ஆகியோர் மேலதிக செயலாளர் திரு ஜே. ரி டி. தும்புவெலவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

சேவைக்கால விபரத்தை, இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் ஊடாக தமக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

ஒய்வுபெற விரும்பும் தோட்டப்பாடசாலை ஆசிரியர் உடனடியாக விபரங்களைச் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

தபால் போக்குவரத்துசீராக இல்லாததினால், விபரங்களை இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் உதவிச் செயலாளரும் மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கேசவன், யாழ். மாவட்ட சிரேஷ்ட அமைப்பாளரும், கொழும்புத்துறை த. க பாடசாலை அதிபர் திரு. அல்பிரட் ஆகியோருடன் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்குமாறு செயலாளர் திரு க. சிவஞானம் தெரிவித்துள்ளார். (க)

## பிரஜைகள் குழு கோரிக்கை

(சுன்னாகம்)

சுன்னாகம் அரசினர் வைத்திய நிலையத்தின் இடநெருக்கடிபற்றி உயர்அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள சுன்னாகம் பிரஜைகள்குழுவினர் நோய்க்கு மருந்துவேண்டி வருவோர் வெய்யிலில் வெளியே இடநெருக்கடியால் நிற்பதால் மேலும் நோய்வாய்ப்படுகிறார்கள் என்றும் உடனடியாக இப்பிரச்னையை தீர்க்கவேண்டும் என்று கோரியுள்ளது.

முன்னாள் கல்விப்பெரும்பாக பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் தலைமையில் கூடிய சுன்னாகம் பிரஜைகள் கிராமோதய சுகாதார நிலையங்கள் நான்கினை நிறுவுவது சம்பந்தமாக உயர்மட்ட ஆலோசனைக் குழுவை நிறுவியுள்ளது. முதலாவது கிராமோதய சுகாதாரநிலையம் இவ்வ ர இறுதியில் திறக்கப்படவுள்ளது

## இலங்கை அகதிகளால்——
# தமிழகத்தில் பெருமளவு சனத்தொகை நெருக்கடி!
### பிரெஞ்சு ஆய்வாளர் தகவல்

(சென்னை)

இலங்கையிலிருந்து அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளமையினால் சீரற்ற சனத்தொகை பெருக்கம் ஏற்பட்டுள்ளதாக பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1971ம் ஆண்டு தொட்டு 1981ம் ஆண்டுவரை மூன்று லட்சம் இலங்கைத் தமிழர்கள் தமிழகம் வந்துள்ளதாகவும், இந்த வரவானது தமிழ்நாடு சனத்தொகை பெருக்கத்தில் நான்கு சதவீதமாகும் என்று தெரிவித்த அவர் 1983 ஜூலை முதல் 1984 மார்ச் வரை 86610 பேர் தமிழகம் வந்து சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு சமவெளிப் பிரதேசம் இந்த அகதிகளுக்கு பொருத்தமற்றிருப்பதால் உதகமண்டலம், நீலகிரி ஆகிய பகுதிகளிலேயே அவர்கள் குடியேறிவருவதாகவும் இதனால் இம்மலைப் பிரதேசங்களின் சனப்பெருக்கம் சீரற்ற நிலையினை ஏற்படுத்தியுள்ளதுடன் அங்கு கூலிவேலை செய்வோருக்கு வேலை கிடைப்பதும் குறைந்துள்ளது என்றும் அவ் ஆராய்ச்சியாளர் தெரிவித்தார். (ரா)

## வாகன விபத்து:
# 30 பேர் பலி!
# 30 பேர் படுகாயம்!

(லண்டன்)

சிறுவர்களை ஏற்றிச் சென்ற வாகனமொன்று லொறியுடன் மோதியதில், வாகனத்தில் சென்ற சிறுவர்களில் முப்பது பேர் கொல்லப்பட்டதாகவும், முப்பதுபேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

இச்சம்பவம் கென்யாவிலுள்ள கெரிச்சோ மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவர்கள் இசை, நாடக விழா ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போதே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொல்லங்கலட்டி அருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் கோவில் மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் முதலாம் திகதி சப்பரத் திருவிழாவும், இரண்டாம் திகதி தேர்த்திருவிழாவும், மூன்றும் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## வைத்திய அதிகாரி இடமாற்றத்துக்கு கடும் எதிர்ப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவட்டவைத்திய அதிகாரி திரு. எஸ் கதிரவேற்பிள்ளையின் இடமாற்றத்திற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு அதனை ரத்துச் செய்யுமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டது மட்டுமன்றி வைத்திய சேவைகளை திறம்பட மேற் கொண்டு பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள திரு. கதிரவேற்பிள்ளை இடமாற்றம் செய்யப்படுவதால் வைத்தியசாலை வளர்ச்சியும் வைத்திய சேவைகளும் பாதிப்படைய நேரிடுமென்று பெரிதும் அச்சம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலை கமிட்டி யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில்; திரு கதிரவேற்பிள்ளையின் சேவை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு தொடர்ந்தும் தேவைப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தபாலகம் இயங்குகிறது

(உடுவில்)

பலகாலமாக மூடப்பட்டுக் கிடந்த சுன்னாகம் தபாற்கந்தோர் வேலைகள் அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியுள்ளது.

தபால் காரியாலய வேலைகள் நடைபெறாமல் இருந்ததனால் பொது மக்கள் பலரும் பல கஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

சுன்னாகம் தபாலதிபரின் விடா முயற்சியும், துணிவுமே தபாற்கந்தோர் மீண்டும் இய

[5-ம் பக்கம் பார்க்க]

## சட்டத்தரணி



(கல்வியங்காடு)

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரியாலையில் வசிப்பவருமாகிய திரு தம்பையா வேலாயுதம் அண்மையில் பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்

சட்ட பட்டதாரியான இவர் உசன் இராமநாதன் மாகவித்தியாலய பழைய மாணவராவார்

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச சனசமூக நிலையத்தின செயலாளராகவும், நடேசர் தமிழ் மன்ற உப தலைவராகவும், கிராம அபிவிருத்திச்சபை செயற்குழு உறுப்பினராகவும் பல சமூக சேவைகளை செய்தவர்

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும். யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திலும் கடமையாற்றிய இவர் எழுதுமட்டுவாள் வேலுப்பிள்ளை-தம்பையா தம்பதிகளின் புத்திரராவார்.

**ஹரன் சினிமா**

தினசரி 10-30 — 2-30

250 நாட்களுக்குமேல் சாட்டியளித்த வெற்றிச் சித்திரம்

மோகன் - பூர்ணிமா

**விதி**

(கலர்)

**S. T. L. மினிசினிமா**

(திருநெல்வேலி)

10-30 2-00

மோகன்—ரேவதி

**உதயகீதம்**

4-30 p. m.

ALLICE GOOD BODY

(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**மொடேர்ண் மினி சினிமா**

தினசரி 1-30 மட்டும்

S. V. சேகர், சுகாசினி மனோரமா நடித்த

**மருமகளே வாழ்க**

**From Russia with Love**

007 - புகழ் சீன் ஹொனறி நடித்த பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த துப்பறியும் படம்

**ஸ்ரான்லி மினி**

(சினிமா)

10-30 2-30

கார்த்திக், அனுராதா, சந்திரசேகர் ஆனந்தபாபு விசு

நடித்த

**புயல் கடந்த பூமி**

(கலர்)

புத்தம்புதிய படச்சுருள் ரிக்கற்றுக்கு முந்துங்கள் ('5x5' திரையில்)

மூலப்பிரதிகளில் இருந்து பிரதிகள் கொப்பி செய்து தரப்படும்.

**லதா மினி**

(கோண்டாவில்)

காலை 10-30 மாலை 2-30 4-00

**'100 RIFELES'**

**யாழ். வின்ஸர் மினி**

தினசரி 10-30, 2-30

ரஜனிகாந் - சிரஞ்சீவி ஸ்ரீதேவி - தேங்காய்சீனிவாசன்

நடித்த

**இராணுவ வீரன்**

வறுவிறுப்பானசண்டைக் காட்சிகள் நிறைந்தஓவியம்

**ஆனந்தி வீடியோ சினிமா**

[மனோகராவில்]

தினசரி 10-30, 2-30

எம்.ஜி ஆர் - ஜெயலலிதா அசோகன்-கே.ஆர். விஜயா

நடித்த

தேவர் பிலிம்

**கன்னித்தாய்**

(புதிய பிரதி)

**லிடோ சினிமா**

சுதாகர் - ராதிகா

நடித்த

**ஆயிரம் வாசல் இதயம்**

(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**

(யாழ். நகர்

10-30, 2-30

பாக்கியராஜ் - சரிதா

நடித்த

**மௌன கீதங்கள்**

(ஈஸ்மன் கலர்)

புதிய கொப்பி


## நினைவுகள் சாவதில்லை

மூன்று வருடங்களுக்கு முன்னர் மே 26-ல் அளவெட்டிக் கிராமத்தில் இனந்தெரியாதவர்களினால் கொலை செய்யப்பட்ட இளைஞர்கள் இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியவர்களை தமிழ்மக்கள் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள். கொடூர மரணங்களும், நியாயமற்ற படுகொலைகளும், மிகவும் தாராளமாக மலிந்து இதயம் இறுகிப் போய் விட்ட இன்றைய நாட்களிலும் கூட, அவர்களைப் பற்றிய நினைவுகள், அவர்களை அறிந்த எவரது நெஞ்சிலும். ஒருவிதமான சோகம் கலந்த நெருடலை ஏற்படுத்தவே செய்கின்றன.

இருபத்தி ஏழு, இருபத்தி எட்டு வயதில் இவர்கள் அகால மரணம் அடைய நேர்ந்தாலும் தாம் வாழ்ந்த சொற்ப காலத்திற்குள்ளேயே சமூக சீர்திருத்தத்திற்காகவும் தமிழ்மக்கள் விடுதலைக்காகவும் ஆற்றிய பணிகள் ஏராளம். அளவெட்டி மஹாஜன சபை நிர்வாக சபையில் முக்கிய பதவிகளிலிருந்து இவர்கள் கிராம வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்கள். அடிக்கடி கருத்தரங்குகளையும் பொதுக்கூட்டங்களையும் நாடத்தி மக்களை அரசியல் விழிப்புணர்வுடன் வைத்திருக்கப் பாடுபட்டார்கள்.

'இறைவன்' விடாமுயற்சியும் பொறுமையும் ஆழ்ந்த அரசியற்சிந்தனையும் கொண்ட இளைஞராவார். தோல்வியைக் கண்டு மனம் தளராது தொடர்ந்து கருமம் ஆற்றுவதில் என்றுமே சலிப்படைந்தது கிடையாது. 'உமா' செயலாற்றலும், நிதானமான சிந்தனைப் போக்கும் உடைய ஒருவராவார், சாதாரண மக்களை எளிதில் கவர்ந்து விடத்தக்க வசீகரமும், வாக்குச் சாதுரியமும் உமாவினுடைய தனிப்பட்ட சொத்துக்கள். இந்த இரண்டு நண்பர்களும் இணைந்து பொது வாழ்வில் ஈட்டிய வெற்றிகளுக்கு இவர்களது இத்தகைய சிறப்பியில்புகளே காரணமாக அமைந்திருந்தன. வாழ்வை அனுபவிக்க வேண்டிய வயதிலும் தமக்கென வாழாது தங்களது சுகபோகங்களைத் துறந்து தமது இன, மொழி, சமூக முன்னேற்றத்திற்காகவும் தமிழ்மக்களின் விடுதலைக்காகவும் தங்களை அர்ப்பணித்த இறைவனதும் உமாவினதும் நினைவுகள் என்றும் நினைவு கூரப்பட வேண்டியன. மரணம் ஒரு போதும் மனிதர்களை-உண்மை மனிதர்களை-வென்றதாக சரித்திரம் இடையாது.

— செல்வன்



ஆசிரியர் அ. யேசுதாசன் நாகலிங்கம் 35 ஆண்டுகள் ஆசிரிய உலகில் உழைத்தவர். இலங்கையின் பல பாகங்களிலும் சிறப்பாக மலைநாடுகளிலும் உதவி ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றி இறுதியில் மல்லாகம் மகாவித்தியாலயத்திலிருந்து 1974ல் இளைப்பாறியவர்.

கணித பாடத்தில் தனது முத்திரையை மாணவரில் பதித்தவர்.

மேவிஇழுத்த முடியும் விசாலமான நெற்றியும் கட்டுக்குலையாத இளமை தவழும் உடலமைப்பும் பலருக்கு அவரை ஒரு பயில்வானாகக் காட்டியிருக்கும். ஆனால் நெருங்கிப் பழகியவர்களுக்கு மாத்திரம் தெரிந்திருக்கும் அந்தத் தங்க மேனிக்குள் இரக்ககுணமும் பாசமும் கலந்த மென்மையானதோர் இதயம் துடித்துக் கொண்டிருந்ததை ஆசிரியர் மறைந்த 31வது நாளில் அவரை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

— மாணவர்கள் (மல்லாகம்)

## பிரஜைகள் குழு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலயத்தில் அண்மையில் திரு த திருஞானசம்பந்தரினால்பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்திற்குச் சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு தி மாணிக்கவாசகர் தலைமைவகித்தார்

இவ் வைபவத்தில் பேசிய திரு. தி. மாணிக்கவாசகர் ஏழாலைப் பகுதி கிராம வாசிகள் இன்றைய நிலைமையில் எதிர் நோக்கும் பிரச்சனைகளை தீர்த்து வைக்கவும், இப்பகுதியில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் இப் பிரஜைகள் குழு முக்கிய பங்காற்றவேண்டும் என்றும், இக்குழு உறுப்பினர்கள் மீது மக்கள் பூரண நம்பிக்கை வைக்கும் வகையில் செயலாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்குழுவின் தலைவராக திரு சி.கந்தசாமியும், காரியதரிசியாக திரு எஸ் கந்தசாமியும், பொருளாளராக திரு த.கந்தசாமியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தபாலகம்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

ங்குவதற்கு வழிகோலியுள்ளன

அண்மைக்காலங்களில் சுன்னாகம் தபாலகத்தில் நடைபெற்ற [illegible]ணம், பொருட்கள் கொள்ளைகள், தாக்குதல்கள் காரணமா[illegible] இச்செயலகத்தின் கதவுகள் பல நாட்களாக பொதுமக்கள் பாவனைக்கு விடப்படாது பூட்டப்பட்டிருந்தன


**ராஜா தியேட்டர்**

யாழ்ப்பாணம்

தினசரி 10-30, 2-30

கமலஹாசன்-ஜெயப்பிரதா

**சலங்கை ஒலி**

கடைசிவாரம்

**VIDEO BLOSSOMS**

இந்தியாவிலும் இலங்கையிலும் சிறந்த வீடியோ, கலர் புகைப்படப்பிடிப்பாளர்கள் உங்களது திருமண[illegible] மற்றும் வைபவங்களை அதிசிறந்த முறையில் [illegible]ம்பிடி[illegible] மகிழ தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்

**வீடியோ புளொசம்ஸ்**

30, சிவப்பிரகாசம் வீதி, யாழ

முதல்தரமான V D O படங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

இன்றைய வெளியீடு

"நம்நாடு", "பேய் வீடு", "ராமன் ஸ்ரீ ராமன்"

V G P

(3 89)



## பிறந்ததின வாழ்த்து

செல்வன்

**க. சுகந்தன்**



மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த முருகேசு கனகசிங்கம் கமலாதேவி (உரிமையாளர், சிங்கம் மோட்டோர் ஸ்ரோர்ஸ், 40/3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) தம்பதிகளின் செல்வப் புதல்வன்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (28-5-85) மண்கும்பானில் உள்ள இராமேஸ்வர இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவர் சகல கலைகளும் கற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துபவர்கள்:

தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மற்றும் உற்றார் உறவினர்

3462



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் வைகாசி மாதம் 16-ம் திகதி (29.5.1985) புதன்கிழமை காலை 9-15 தொடக்கம் 10-15 வரையுள்ள கடகலக்கின சுப முகூர்த்த வேளையில்

| திருவளர் செல்வன் **ரவீந்திரன்** அவர்களுக்கும் | திருவளர் செல்வி **நளாயினி** அவர்களுக்கும் |
|---|---|

திருமண விழா திருவருள் துணை கொண்டு நல்லூர் சிவன்கோவிலில் நடைபெறும். அவ்வமயம் தாங்களும் தங்கள் இஷ்ட மித்திர குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. க. பொ. தம்புசாமியும் (சீப்சைட், கொழும்பு-யாழ்ப்பாணம்) பாரியாரும், "செல்லகிரி", 105, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். | திரு. மு. ஆறுமுகமும் (பிரதம கணக்காளர்) பாரியாரும், No. 3, "C" Block, 1st Floor, Govt. Flats, Colombo-4. |

(3488)



மாணவர் — அரச ஊழியருக்கு

## காங்கேசன் ரவல்ஸ்

வழங்கும்

**தினசரி பஸ் சேவை!**

769 பாதை வழியாக 3-6-85 முதல்

காங்கேசன்துறை — கச்சேரி

(சுண்டுக்குளி ஊடாக)

நடைபெறவுள்ளது

பருவகாலச் சீட்டுக்களை காரியாலய நேரங்களில் எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ நேர அட்டவணை

| காங்கேசன்துறையில் புறப்படும் நேரம் | | கச்சேரியில் புறப்படும் நேரம் |
|---|---|---|
| 6–50 | — | 7 45 |
| 12 30 | — | 1-30 |
| 3 00 | — | 4 05 |

**காங்கேசன் ரவல்ஸ்**

பிரதான வீதி,

காங்கேசன்துறை.

3485

17 JUN 1985

# இலங்கையில் நாலாயிரம் தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்!

## சென்னையில் 'அமிர்' தகவல்

(சென்னை)

இலங்கையில் பாதுகாப்பு படையினரின் கொடுமைகள் காரணமாக இனக்கலவர நெருக்கடி மேலும் கடுமையாகிவிட்டதென்றும், இந்தக் கலவரங்களால் கடந்த சில மாதங்களில் 4000 தமிழர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

தமது ஆஸ்திரேலியப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பியுள்ள திரு. அமிர்தலிங்கம் நிருபர்கள் மத்தியில் தொடர்ந்து பேசுகையில்; இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை துவக்க எவ்வித வாய்ப்பும் இருப்பதாக தெரியவில்லை என்றும், அவ்வாறு பேச்சுவார்த்தை எதையும் மீண்டும் துவக்குவதாயிருந்தால் தமிழர்களுக்காக பிரதிநிதித்துவப் படுத்தும் எல்லா அரசியல் அமைப்புகளுக்கும் அந்தப் பேச்சுக்களில் இடமளிக்க வேண்டுமென்றும், இப்போது உள்ள நிலையில் விடுதலை இயக்கங்களை நடத்தும் அமைப்புக்களிடையே எந்தப் பிளவுக்கும் இடந்தரமுடியாது என்றும் கூறினர்.

"இலங்கை ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் புதுடில்லி விஜயம் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியாவுக்குள்ள பங்கை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுமானும் காலம்கடந்தாவது இலங்கை அரசு நிலைமையை உணர்ந்துகொண்டது என்பதே அர்த்தமாகும். இலங்கை அரசு "வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின்" உயர் சக்தி வானொலிநிலையத்தை அமைக்க சிலாபம் அருகே 400 ஹெக்டர்நிலத்தை அளித்துள்ளது. இந்த வானொலி நிலையம் இந்துமா சமுத்திரத்தில் கப்பல்களின் நடமாற்றம் பற்றி உளவுசெய்திகளை பெறுவதற்காக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது" என்றும் திரு. அ அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## யாழ்.தேர்தல்அலுவலகத்தில் ரேனியோ பேப்பர் திருட்டு

(சுண்டுக்குழி)

யாழ். தேர்தல் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் திடீரென உட்புகுந்த ஒருகோஷ்டியினர் முக்கியமான சில பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர். அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த தேர்தல் அலுவலக காவலாளி நில அளவைப்பகுதி காவலாளி, விவசாய விரிவாக்க நிலைய காவலாளி ஆகிய மூவரையும் ஓர் அறைக்குள் முகம் குப்புறப்படுக்க வைத்துவிட்டு அலுவலகத்தின் பின்பக்க யன்னலை உடைத்து களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த 400 றிம் ரோனியோ பேப்பர், 700 ஸ்ரென் சில்கள், பி. சி. படிவங்கள் முதலியவற்றை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. இது பற்றி யாழ். பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

## கேபிள் கொள்ளை: தொலைபேசி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுள சந்தியில் நிலத்திற்கு கீழ் உள்ள 4 கேபிள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதால் நல்லூர் பகுதியில் சுமார் 100 தொலைபேசி செயலிழந்துள்ளன.

ஆரியகுளம் சந்தியில் குண்டு வெடித்ததினால் வீதியில் பெரிய குழி ஏற்பட்டது என்றும் இக்குழி இன்னும் மூடப்படாமல் இருப்பதால் நிலத்திற்கு அடியில் உள்ள 4 கேபிள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இக்கேபிள்களை மீண்டும் போடுவதற்கு இக் குழியை மூடி வீதியை சீராக்குமாறு பெருந்தெருக்கள் திணைக்களத்திடம்தொலைத்தொடர்பு பகுதியினர் கோரியுள்ளதுடன் சீராக்க அனுமதி வழங்குமாறு இராணுவ அதிகாரியிடமும் கேட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (க)

## விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து உருளைக் கிழங்கு லொறிகள் நேற்று வந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கிலோ 24 ரூபாவாகவிருந்த உருளைக்கிழங்கு நேற்று கிலோ 18 ரூபாவாக குறைந்துள்ளது.

## மரணங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிஜிவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி எர்ஷாத் தனது பயணத்தை ரத்துச்செய்துள்ளார்.

## தமது பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஏற்பாடு நடைமுறையிலிருக்கும். அதன் பிறகு நிலைமையை அவதானித்து முடிவு செய்யப்படும்.

பாதகப்பட்டுள்ள ஊழியர்கள் தமது பகுதியில் தாம் பணிபுரியும் திணைக்களத்தின் பகுதி அலுவலகம் இல்லாதவிடத்து யாழ்ப்பாணம் கச்சேரியில் அதற்கென வைக்கப்படும் பதிவேட்டில் தமது வரவைப் பதியலாம் இதற்கான பதிவேடு யாழ். மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

இவ் ஊழியர்கள் தமது கடந்த மாதச் சம்பளத்தை தத்தமது பகுதி அலுவலகங்கள் மூலம்குறித்த பகுதி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளும் படியும் கோரப்பட்டுள்ளனர்.

## கொள்ளைபோன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சுற்றிவளைத்துப் பிடித்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட கம்பியூட்டரை மீட்டதாகவும் கூறப்படுகிறது. கம்பியூட்டருடன் ஐவரும் அப்பகுதியில் ஊர்வலமாகச் சென்று 'சொல்கிரிட் யாட்' டில் கம்பியூட்டரை ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

யாழ். மாநகரசபையின் மற்றொரு காரியாலயத்திலும் சில பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## மேற்கு ஜெர்மன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லாறு, கலாசாரம், அரசியல் நிலை, மொழி, மதம், பொருளாதாரம், விடுதலை இயக்கங்கள் குறித்து இவர்கள் டாக்டர் நீலனுடன் உரையாடினர்.

டாக்டர் நீலன் இவர்களுக்குப் பதிலளிக்கையில், "தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைக் காப்பாற்றும் வகையிலேயே அரசியல் இயக்கங்கள் தோன்றியுள்ளன. எனவே பெரும்பான்மை சிங்கள இனம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை வழங்கி ஒற்றுமை,சமாதானத்துடன் வாழ வேண்டும்" என்றார். (கி)

## காத்தான்குடிச்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுகிறது.

மஞ்சத் தொடுவாய், நாவற்குடா போன்ற இடங்களில் சுமார் 25 வீடுகள் எரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக ஆலோசனை நடத்தவும் அமைதியைத் தொடர்ந்து பேணவும் இன்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மகாநாடொன்றை நடத்துகிறார்.

மட்டக்களப்பு வேது பாராளுமன்ற உறுப்பினர் பரீத்மீரா லெப்பை மற்றும் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், காத்தான்குடி பகுதி தமிழ் முஸ்லிம் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

## பலகட்சி கூட்டத்தில் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் தினமும் படுகொலை செய்யப்படுவதை குறித்து நேற்று முன்தினம் நாசர் கோயிலில் நடந்த பல்வேறு அரசியல் கட்சிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கன்யாகுமாரி தூய இருதய ஆலயத்தில் பிரார்த்தனை ஒன்றும் இது தொடர்பாக நடத்தப்பட்டது. (க)

## அபகரித்த பொருட்கள் திரும்பி வந்தன

(யாழ்ப்பாணம்)

திக்கம் பனம் பொருள் பலதொழில் தொகுப்பு நிலையத்திலும், பனஞ்சாராய வடிசாலையிலும் அபகரிக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த பொருள்களும் மதுசாரம் முதலியனவும் முழுமையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன

பெருந்தன்மையுடன் பொது வேண்டுகோள்களுக்கு செவிமடுத்து அபகரித்த பொருட்களைத் திருப்பித்தந்தமைக்காக பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு நடராஜா சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

## சூட்டு காயத்துடன் மரணமாகிக் கிடந்தார்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை சந்தியில் உள்ள மின்கம்பமொன்றில் நேற்று நண்பகல் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கட்டப்பட்டிருக்கக் காணப்பட்டார்.

இவர் கட்டப்பட்டிருந்த கம்பத்தில் கிடந்த அட்டை ஒன்றில் "தேசத்துரோகிக்கு மரண தண்டனை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது ஏராளமான மக்கள் இவரை பார்வையிட்டனர்.

## மினிவான் மறைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று நண்பகல் இனந்தெரியாதவர்களால் மினிவான்ஒன்று கடத்திச் செலைப்பட்டது. (க)

## இ. தொ. கா. நடத்தும் நாடு முழுவதும் அமைதிப் பிரார்த்தனை

(கொழும்பு)

நாட்டில் அமைதியையும் சேமத்தையும் பேணுவதற்கென நாடு முழுவதும் பிரார்த்தனைகளை நடத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்து வருகிறது.

அண்மையில் நடந்த மேற்படி ஸ்தாபனத்தின் நிர்வாகக்குழு எடுத்த தீர்மானத்தின் படி எதிர்வரும் 2ம் திகதி போயா தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு தினமும் மூன்று மணிநேரம் இப்பிரார்த்தனை நடைபெறும்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற கொலைகளை மேற்படி கமிட்டி கண்டித்ததுடன் அனுதாபமும் தெரிவித்துள்ளது. செட்டிக்குளம் பகுதியிலிருந்து தமிழர்களை வெளியேற்றுவதற்கு நடைபெறும் முயற்சிகளையும் அது கண்டித்திருப்பதுடன் இச் செய்தி மறுக்கப்பட்டுள்ள போதிலும் தமிழ்ப்பகுதிகளில் கிராமவாசிகள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு வருவது புதிய விடயமல்ல வென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

## இன்று சந்திப்பர்

(உடுவில்)

சுன்னாகம் பிரஜைகள் குழுவினரும் விழிப்புக்குழுவினரும் இன்று செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி சபைச் செயலர்கள் திருவாளர்கள் பாலசிங்கம், பரமநாதன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. மாணிக்கவாசகர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரைச் சந்தித்துச் சுன்னாகம் பகுதியில் நிலவும் பல குறைபாடுகளை எடுத்துக் கூறியதன் விளைவாக அரசாங்க அதிபர் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

## நூலகத்தின் கிளை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலகத்தின் வண்ணார்பண்ணை கிளை நூலகம் நட்டா தெருச்சந்திக்கருகில் உள்ள கட்டடத்தில் இம்மாதம் 30-ம் திகதி காலை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி கே. சிவஞானத்தினால் திறந்து வைக்கப்படும். (க)

## அச்சத்தால் தயங்குகிறார்களாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மண்டபத்திற்கு எதிரிலுள்ள மின்சார பொறியியலாளர் காரியாலயத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அச்சம் காரணமாக அங்கு செல்லத் தயங்குகின்றனர் எனக் கூறப்படுகிறது

அங்கு கடமையாற்றிய சில ஊழியர்கள், நல்லூர் இந்து விடுதியிலுள்ள மாநகரசபை கிளை அலுவலகத்திற்கு சென்று வரவைப் பதிந்து வருவதாகக் கூறப்படுகிறது. (க)

## ஓய்வூதியம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். விளையாட்டு அரங்கில் நேற்று ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட வயோதிபர்கள் சென்று தங்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி வீதியால் யாழ். மத்திய கல்லூரி, நீதிமன்றத்தை கடந்து யாழ் மாநகரசபைக்கு முன்னால் உள்ள பிரதான வீதியால். யாழ். விளையாட்டு அரங்கிற்கு சென்று ஓய்வூதியத்தைப் பெற்றார்கள். (க)

## நடிகர் சுமன் கைது!

[சென்னை]

சினிமா நடிகர் சுமனும் மற்றும் ஒருவரும் ஆபாச 'புளுபிலிம்' படம் தயாரித்ததாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இளம் பெண்களைப் பயன்படுத்தி இவர்கள் ஆபாசப் படங்களைத் தயாரித்ததாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நடிகர் சுமன் தெலுங்கு, தமிழ், மலையாளப் படங்களில் நடித்துவருகிறார். (இ)

## காணிப்பதிவு அலுவலகம்

(சுண்டுக்குழி)

யாழ் நீதிமன்றவளவில் தற்போது இயங்கி வரும் காணிப் பதிவாளர் அலுவலகம் யாழ் செயலகத்தில் முன்பு இலங்கை வங்கி கிளை இருந்த அலுவலகத்திற்கு விரைவில் மாற்றப்படலாம் என அறியப்படுகின்றது.


## மரண அறிவித்தல்
### செல்லப்பா சிறினிவாசன்

பண்ணாகம் தெற்கு செல்லப்பா சிறினிவாசன் (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய முன்னாள் அதிபர்) காலமானார். இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பராசக்தி, சரவணபவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பெ. கனகரத்தினம் (யாழ். சுங்க இலாகா) அவர்களின் மாமனும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று 28 5-85) பி. ப. 2 மணிக்கு திருவடி நிலை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3499)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985ஆம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126